# இந்தியாவிலேயே வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

5 -ஆம் பக்கத் தொடர்ச்சி

திட்டங்களை செய்திருக்கிறோம். நம்முடைய திட்டங்களால், தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ இரண்டரைக் கோடி பயனாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். அவர்களின் வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் நம்முடைய கூட்டணிக்கு கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பும் கடமையும் உங்களுக்குத்தான் இருக்கிறது!

**இந்த இயக்கம் 75 ஆண்டுகளாக நிலைத்திருக்க காரணம்!**

அதேபோன்று, தொண்டர்களின் நம்பிக்கைதான் நம்முடைய முதல் பலம். என் இயக்கம் என் கட்சி என் தலைமை என்ற எண்ணம் கொண்டவர்கள் நம்முடைய தொண்டர்கள். “நானும் என் குடும்பமும் கழகத்துக்காக இருக்கிறோம். கழகம் எனக்கும், என் குடும்பத்துக்கும் பாதுகாப்பாகஇருக்கிறது” என்றஎண்ணம்தான், இந்த இயக்கம் 75 ஆண்டுகளாக நிலைத்திருக்க அடிப்படை காரணம்! அந்த நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

**கழகத்தின் சார்பில் ரூ. 10 லட்சம் நிவாரண நிதி!**

கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.

நான் உங்களுக்கு எல்லாம் சொல்லிக் கொள்வது, பொறுப்பில் இருக்கும் நிர்வாகிகளும், அவர்கள் சொல்வதை நிறைவேற்றும் தொண்டர்களும்தான் கழகத்தின் வலிமை! நிர்வாகி களை, தொண்டர்கள் முன்னோடிகளாக கருதவேண்டும். தொண்டர்கள் இல்லாமல் எந்த இயக்கமும் இருக்க முடியாது. அதேபோல் நிர்வாகிகள் இல்லாமலும் செயல்பட முடியாது. இருவருமே நம்முடைய கொடியில் இருக்கும் கருப்பு சிவப்பு போன்று, ஒற்றுமையாக செயல்படவேண்டும். மாவட்டச் செயலாளர்கள் தங்களுக்குக் கீழ் இருக்கும் நிர்வாகிகளையும், பொறுப்பாளர்களையும் அரவணைத்து செல்லவேண்டும். தாங்கும் தூண்கள் இல்லாமல், கோபுரம் நிற்க முடியாது என்பதை மனதில்வைத்து செயல்படுங்கள்.

தி.மு.க.என்று இயக்கம் தொடங்கும்போதே, இளைஞர்களால் உருவான இயக்கம். பேரறிஞர் அண்ணாவுக்கு அப்போது 40 வயதுதான். தலைவர் கலைஞருக்கு 25 வயசு. பேராசிரியருக்கு 27 வயசு. நாவலர், மதியழகன் அனைவருமே இளைஞர்கள்தான். அவர்கள்தான் அரசியல் களத்திலும், போராட்டக் களத்திலும் முதன்மையாக நின்று பல இளைஞர்களை ஈர்த்தார்கள். கழகத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தார்கள். அதுபோன்றுதான், இங்கே உள்ள நிர்வாகிகளும் இளைஞர்களை கட்சியில் ஊக்கப்ப டுத்தவேண்டும்.

**இளைஞர்களுக்கு வாய்ப்பைக் கொடுங்கள்!**

கழகத்தில் இப்போது 23 அணிகள் இருக்கிறது. புதிதாக இரண்டு அணிகள் இன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது! இதில் பெரும்பாலான அளவில், நிர்வாகிகள் போடப்பட்டிருக்கிறார்கள். இன்னும் நிரப்பப்படாத பொறுப்புகளில் இளைஞர்களை நியமனம்செய்யுங்கள்! அணிகள் அனைத்துமே, தாய்க் கழகத்திற்கு வலு சேர்க்கத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் இளைஞர்களுக்கு வாய்ப்பைக் கொடுங்கள். எந்தளவுக்கு இளைஞர்களுக்கு இடம் கொடுக்கிறீர்களோ, அந்தளவுக்கு கழகத்தில் புது ரத்தம் பாயும். செயல்பாடுகள் வேகமாக இருக்கும். வெற்றி உறுதி செய்யப்படும்.

தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க, மண்டல வாரியாக பொறுப்பாளர்கள் வந்து உங்களை சந்திப்பார்கள். புதிய நிர்வாகிகள் எல்லாம் சிறப்பாக செயல்படவேண்டும். 234 தொகுதிகளில்பார்வையாளர்களாகநியமிக்கப்பட்டவர்கள், அவர்கள் பணிகளை செய்துகொண்டு இருக்கிறார்கள். பூத் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. தேர்தலை சந்திக்க கழகத்தின் கட்டமைப்புகளை ஓராண்டுக்கு முன்பே முழுமையாக அமைத்துவிட்டோம். இதை வரும் காலங்களில் செயல்படுத்தினாலே பெரிய வெற்றியை எளிதாக அடையலாம்.

> **க**ழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.

முதல் இரண்டு மாதங்களுக்கு, உங்களுடைய முதல் பணி என்பது, புதிய உறுப்பினர் சேர்க்கை.

*சிறப்புத் தீர்மானம் இயற்றியபடி, சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ விளக்கம் கொடுத்தபடி, ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பெயரில் உறுப்பினர் சேர்க்கையை தொடங்க இருக்கிறோம்.

**வீடு வீடாகச் சென்று உறுப்பினர்களை சேருங்கள்!**

*வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கையை நடத்தவேண்டும். தி.மு.க.வின் திட்டங்களை, சாதனைகளை, உரிமைப்போராட்டங்களை எடுத்துச் சொல்லுங்கள்.

இன்றைய நிலையில் கழக ஆட்சியின் திட்டங்கள் சென்று சேராத குடும்பமே தமிழ்நாட்டில் இருக்காது. ஒவ்வொரு குடும்பத்திலும் தி.மு.க.வுக்கு மகத்தான ஆதரவு இருக்கிறது. அவர்களில் ஆர்வமுள்ளவர்களை கட்சியில் உறுப்பினராக சேர்க்கவேண்டும்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்கான படிவத்தை, விரைவில் அறிவாலயத்துக்கு வந்து பெற்று செல்லவேண்டும். இந்தப் பணியை நானே தொடர்ந்து ஆய்வு செய்வேன். இங்கு வந்திருக்கும் நிர்வாகிகளுக்கு நான் போன் மூலமாக, தொடர்பு கொண்டு பேசுவேன். அப்போது எவ்வளவு உறுப்பினர் சேர்க்கை செய்திருக்கிறீர்கள்என்று நீங்கள் சொல்லவேண்டும். இந்தப் பணியை நீங்கள் சிறப்பாக செய்வீர்கள்என்று நான் முழுமையாக நம்புகிறேன்!

என்னைப் பொறுத்தவரையில், நீங்கள்அனைவரும் ஒரு உறுதிமொழியை எடுத்துக்கொள்ளவேண்டும். என் வாக்குச்சாவடியில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியை வெற்றி பெற வைப்பேன் என் தொகுதி வெற்றித் தொகுதி என்ற உறுதிமொழியை அனைவரும் எடுத்துக்கொண்டு செயல்படவேண்டும்.

பா.ஜ.க.விடம் இருந்து தமிழ்நாட்டை காப்பாற்றும் கட்சி கட்டமைப்பும், கொள்கை பிடிப்பும், வலிமையான தலைமையும், நம்மிடம் மட்டும்தான் இருக்கிறதுஎன்று தமிழ்நாட்டில் இருக்கும் சின்ன குழந்தை க்குக்கூட தெரிந்திருக்கிறது.

ஆனால், தேர்தல் வெற்றிக்கு இதுமட்டும் போதாது! பூத் அளவில்வெற்றிபெறும் வாக்குகள்தான் தொகுதியில் வெற்றிபெற வைக்கும். தொகுதிகளை வென்றால்தான் ஆட்சி! அதனால், பூத் அளவிலான மைக்ரோ மேனேஜ்மெண்டும் மிக முக்கியம்.

தமிழ்நாடு முழுவதும் எத்தனை உட்கட்டமைப்பு பணிகள் நடந்துகொண்டு இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். அதெல்லாம் தொய்வில்லாமல் சொன்ன தேதியில் முடிக்கப்பட்டு, செயல்பாட்டுக்கு வரவேண்டும் என்றால், மீண்டும் நம்முடைய ஆட்சிதான் வரவேண்டும்என்று புரிய வையுங்கள்.

ஜூன் முதல் வாரத்தில் இருந்து,என்னுடைய பணி என்ன என்றால், கழக நிர்வாகிகளை தொகுதி வாரியாக, அண்ணா அறிவாலயத்தில் நான் சந்திக்க இருக்கிறேன். அப்போது இன்னும் விரைவாக, ஒன் டூ ஒன் பேசுவோம்.

**உழைப்பு உழைப்பு என்று வளர்ந்தவன் நான்!**

ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு பொறுப்பை நான் வழங்கியிருக்கிறேன். அதை சிறப்பாக எந்த விமர்சனமும் இல்லாமல், செய்து காட்டினால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி இருக்க முடியாது.

எனக்குத் தெரிந்தது, அரசியல் மட்டும்தான். தலைவர் கலைஞராக இருந்தால், கவிதை எழுதுவார்;கதைகள் எழுதுவார்;சினிமா வசனம் எழுதுவார்;இலக்கிய மேடைகளில் கலக்குவார். ஆனால், நான் அரசியல் - அரசியல், உழைப்பு-உழைப்புஎன்று வளர்ந்தவன். டிவி பார்த்தால் கூட, நியூஸ் சேனல்தான் பார்ப்பேன். சோசியல் மீடியாவை பார்த்தாலும், அரசியல் செய்திகள், பேட்டிகளைத்தான் பார்ப்பேன்.

**வெற்றிச் செய்தியை தாருங்கள்!**

ஒருவரை நம்பி பொறுப்பை ஒப்படைத்துவிட்டால் அவர்கள் அதை சிறப்பாக செய்யவேண்டும். “தலைவர் சொன்ன பணியை முடித்துவிட்டோம், வெற்றி பெற்றுவிட்டோம்” என்று சொல்லவேண்டும். நான் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது, அந்த வெற்றிச் செய்தியை மட்டும்தான். நான் கொடுத்த பொறுப்பை, சரியா செய்து அந்த வெற்றிச் செய்தியை தாருங்கள் என்பதுதான் என்னுடைய இந்தப் பொதுக்குழுச் செய்தி!

திராவிட முன்னேற்ற கழகம் இருக்கும் வரை, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும் வரை, டெல்லி படையெடுப்புக்கு ஒருபோதும் தமிழ்நாடு வீழாது! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! பொதுக்குழுவில் தொடங்கியிருக்கும் இந்தப் பயணத்தை சட்டமன்றத் தேர்தல் வெற்றிவிழாப் பொதுக்கூட்டத்தில் நாம் நிறைவு செய்யவேண்டும்! அதில் மீண்டும் ஒன்றாக சந்திப்போம் என்று கூறி விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## கழக பொதுக்குழு தீர்மானம்!...

6 -ஆம் பக்கத் தொடர்ச்சி

அதுமட்டுமின்றி, கடந்த வணிகர் நாளின்போது நடைபெற்ற வணிகர் கோரிக்கை பிரகடன மாநாட்டில், ஏற்கெனவே தலைவர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டது போல், தமிழ்நாட்டில் உள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளில் தமிழ் இடம்பெற வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்துள்ளார்.

எனவே, தமிழை வளர்க்கவும், தமிழினத்தைக் காக்கவும், தமிழ் நாட்டைப் பேணவும், இனிவரும் காலங்களில் தமிழர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்குத் தமிழில் பெயர்களைச் சூட்டவும் - வணிகப் பெருமக்கள் தமிழ்நாட்டில் உள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளில் தமிழில் பெயர் எழுதவேண்டும் எனவும் இப்பொதுக்குழு அனைவரையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் : 26**

**அ.தி.மு.க. ஆட்சியின் அவலமான பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு வரவேற்பு!**

தமிழ்நாட்டை மட்டுமின்றி இந்தியா முழுவதையும் அதிர வைத்த அ.தி.மு.க ஆட்சிக் காலத்தின் பொள்ளாச்சி பாலியல் குற்றங்கள் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய களங்கமாகும். இளம்பெண்களைச்சீரழித்த குற்றவாளிகள் அ.தி.மு.க.வில் பொறுப்பில் இருந்த நிலையில், அவர்களை அ.தி.மு.க அரசு காப்பாற்ற முயன்ற நிலையில், தி.மு.க.வும் மற்ற கட்சிகளும் போராட்டம் நடத்தின. பழனிசாமி அரசு, கண்துடைப்பு விசாரணை நடத்திய நிலையில், கழகமும் மற்ற அமைப்பினரும் முன்னெடுத்த கடும் போராட்டத்தின் விளைவாகவே சி.பி.ஐ. விசாரணைக்கு இவ்வழக்கு சென்றது. அப்போது எதிர்க் கட்சித்தலைவராக இருந்த நமது கழகத் தலைவர் அவர்கள், “நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு இதில் நிச்சயம் நியாயம் கிடைக்கும்” என உறுதி அளித்தார். கழக ஆட்சி அமைந்ததும் சி.பி.ஐ விசாரணைக்குத் தமிழ்நாடு அரசின் தரப்பில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டு, தற்போது பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை சிறைத் தண்டனை என்கிற தீர்ப்பு வழங்கப்பட்டு, நீதி நிலை நாட்டப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கு மொத்தம் ரூபாய் 85 இலட்சம் ‘மாவட்ட சட்ட உதவி மையம்’ மூலம் நிவாரணத் தொகை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக ஒவ்வொருவருக்கும் அரசு சார்பில் ரூ. 25 இலட்சம் வழங்கப்படும் என உத்தரவிட்டுள்ளார். அ.தி.மு.க. ஆட்சியில் அந்தக் கட்சியினரின் ஆதரவுடன் நடந்த பொள்ளாச்சி இளம்பெண்கள் பாலியல் வழக்கின் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்பை இந்தப் பொதுக்குழு பெரிதும் வரவேற்பதுடன், அந்த நீதியைப் பெறுவதில் உறுதியாக இருந்து, பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ. 25 இலட்சம் கூடுதலாக வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மனித நேய நடவடிக்கைக்கும்;

சென்னையில் மாணவி ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள காவல் துறை மூலம் விரைந்து விசாரணை நடத்தி, ஐந்தே மாதங்களில் நீதியைப் பெற்று தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் - தமிழ்நாடு காவல்துறைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தப் பொதுக்குழு, பாராட்டுகளையும் - நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் : 27**

**வஞ்சக பா.ஜ.க.வையும் துரோக அ.தி.மு.க.வையும் விரட்டியடித்து 2026-இல் கழக ஆட்சி தொடர களப்பணியைத் தொடங்குவோம்!**

ஒரு கையில் வாளும் மற்றொரு கையில் கேடயமும் ஏந்திப் போர்க்களம் காணும் தளபதியாக நம்முடைய கழகத் தலைவர், மாநில உரிமைகளுக்காக ஒன்றிய அரசுக்கு எதிரான சட்டப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திய படியே, தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி, இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் ஜனநாயகக் காவலராக விளங்கு வதுடன், இந்தியாவில் வேறெந்த மாநிலமும் நிறைவேற்றிடாத முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக முன்னிறுத்தி வரும் நிலையில், தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய நிதி, வரி வருவாய் உள்ளிட்ட அனைத்தையும் முறையாக வழங்காமல் வஞ்சகம் செய்யும் ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க.வையும், அதன் பாசிச-எதேச்சாதிகாரப் போக்கு அனைத்திற்கும் துணை போய், தன்னுடைய ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைத்ததுடன், தற்போதும் அந்த வஞ்சகத்திற்கு முழுமையாகத் துணை போகும் அ.தி.மு.க.வையும் தமிழ்நாட்டு மக்கள் கடந்த தேர்தல்களில் தொடர்ந்து புறக்கணித்து வரும் நிலையில், எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் வஞ்சக பா.ஜ.க.வையும், துரோக அ.தி.மு.க.வையும் முழுமையாக விரட்டியடித்து, இந்தியாவின் ஜனநாயகக் காவலராம் நம் கழகத் தலைவர் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நல்லாட்சி தொடர்ந்திட அனைத்துத் தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெறக் கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகளும் இன்று முதல் தேர்தல் பணிகளை விரைவுபடுத்தி, அயராது பாடுபடுவோம்! தலைவரை மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர வைக்க இப்பொதுக் குழு சூளுரைக்கிறது!

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கீரனூர் உத்தமநாத சுவாமி உடனுறை பிரஹதம்பாள் திருக்கோயிலில், புதிய திருத்தேர் பிரதிஷ்டை மற்றும் வெள்ளோட்ட விழாவினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்தார். உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, செயல் அலுவலர் (திருக்கோயில்கள்) முத்துராமன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## மும்பை புறநகர் மாநில தி.மு.க. சார்பில் முதியோர் - ஆதரவற்றோர்க்கு உணவு!

*மும்பை, ஜூன் 2 -* திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேனாள் தலைவரும் தமிழினக் காவலருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றியி ரண்டாம் ஆண்டு பிறந்தநாள் விழா நாளை (03-06-2025 - செவ்வாய்க் கிழமை) அந்தேரி - விஜய் நகர் மரோல் மரோசி சாலையில் உள்ள “சிஸ்ட்டர்ஸ் அடோரர்ஸ் நவ ஜோதி ஹோம்” அனாதைச் சிறுவர்கள் இல்லத்தில் புறநகர் மாநில திமு கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தலைமையில் மாலை சரியாக 7 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி கிருஷ்ணன் , வதிலை பிரதாபன் ஜேம்ஸ் தேவதாசன், அ.இளங்கோ, வே. சதானந்தன், வெ.அ.ஜெய்னுல்லாபுதீன், வீரை சோ பாபு, சிவக்குமார் சுந்த ர் ராஜ், மெஹபூப் பாஷா, எஸ்.பி.குமரேசன் , சிலுவை தாசன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

மும்பை மாநில திமுக ழக இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார், கல்யாண் கிளைக்கழக அவைத்தலைவர் க.ஜீவானந்தம், பீவாண்டிக் கிளைக் கழகச் செயலாளர் மெஹபூப் பாஷா, ஜோஹேஸ்வரி கிளைக்கழகம் தமிழினநேசன், தானே கிளைச் செயலாளர் பாலமுருகன், முலுண்டு கிளைச் செயலாளர் பெருமாள், வாஷி கிளைக்கழகச் செயலாளர் பழனி, வாஷி கிளைக் கழகத் தோழர்கள் தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன் ஜி.பசுபதி நாதன், சயான் கிளைக் கழகச் செயலாளர் சி.சுடலையாண்டி, சீத்தா கேம்ப் கிளைக்கழகம் சார்பில் ஆழ்வார், ராஜேந்திரன், அம்பர்நாத் கிளைக் கழகச் செயலாளர் ஜஸ்டின், திவா கிளைக்கழகச் செயலாளர் வேல்முருகன், ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் கு.தர்மலிங்கம், பாண்டு, சுரேஷ், மற்றும் பல கழக உணர்வாளர்கள் நிகழ்வில் முன்னிலை வகித்துச் சிறப்பிக்கவுள்ளார்கள்.

### திருச்சி மாநகர முன்னாள் செயலாளர்

## கே.கே.எம்.தங்கராஜா மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 2 - திருச்சி மாநகரக் கழக முன்னாள் செயலாளர் கே.கே.எம்.தங்கராஜா அவர்கள் மறைவு செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

திருச்சி மாநகரக் கழக முன்னாள் செயலாளரும், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டக் கழக முன்னாள் பொருளாளருமான திரு. கே.கே.எம்.தங்கராஜா அவர்கள் மறைந்த செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

மலைக்கோட்டை மாநகரில் கழகம் வளர்த்து, மக்களின் அன்பைப் பெற்ற திரு. தங்கராஜா அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் திருச்சி மாவட்ட உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுராந்தகம் சி. ஆறுமுகம்

**ஜூன் 2 (2005)**



**கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.**

**மதுராந்தகம் ஒன்றியச் செயலாளராகவும், தொடர்ந்து 20 ஆண்டுகள் செங்கற்பட்டு மாவட்டக் கழக செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் – தி.மு.க. அறக்கட்டளை உறுப்பினர், கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளையும் வகித்தவர்.**

**மூன்று முறை மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். குறிப்பாக, 1984ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 90 பேர் இவரை எதிர்த்து போட்டியிட்ட போதும், கடுமையாக போராடி வெற்றி பெற்றவர்.**

**1949 முதல் 2005 வரை கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தில் ஒரு வருடம் சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**